[illegible]

[illegible]

N14 / 2-1914

[illegible] வேறுகை

([illegible])

[illegible]

சி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1914

[illegible] | [விலை [illegible]

O-, IJAP, V
N14

சிறுவர்களுக்கான கதைகள்

	ரூ.	அ.	பை.
லிலிபுட் யாத்திரை	0	4	0
பஞ்சதந்திரம்	0	4	0
விவேக சந்திரிகை	0	4	0
நாற்பது திருடர் கதை	0	3	0
கதைக்கொத்து மலர் 1	0	3	0
ஷை மலர் 2	0	3	0
அல்லாவுதீன்	0	2	6
விக்டோரியா நல்லரசி	0	2	6
இரட்டைப் பிள்ளைகள்	0	2	0
டிக் உட்டிங்க்டன்	0	2	0
மாயூரம்-இடபதீர்த்தம்	0	2	0
தெனாலி ராமன் கதை	0	2	0
நற்பழக்கம்	0	2	0
மாயத் தாமரை	0	2	0
மாயப் பொம்மை	0	2	0
சீதிக்கேசபுரம்	0	2	0
மல்லிகா	0	2	0
இரண்மயி	0	2	0
இராதா இராணி	0	2	0
அரிச்சந்திரன்	0	1	6
ஆபத்தில் நேசன்	0	1	6
செங்கை வளவன்	0	1	6
ஆராயும் அங்குட்டன் கதை	0	1	6
போலி ராஜகுமாரன்	0	1	6
நல்ல பாடம்	0	1	6
செம்படவன்	0	1	6
வர்த்தகன்	0	1	0
சண்டமாருதம்	0	1	0
கடுவெளிக் கனவு	0	1	0
கடற்கரை வாசம்	0	1	0
கண்டுவிட்டுக் கண்டுபோய்தல்	0	1	0

அதிசயமான கிளி	... ...	0	1	0
சாமர்த்திய நல்லறிவு....	... ...	0	1	0
தாளிலாக் கதவு....	... ...	0	1	0
அன்புள்ள சகோதரி ...	... ...	0	1	0
மூன்று பூதங்கள் ...	... ...	0	1	0
பச்சை தேவதை ...	...	0	1	0
நல்ல பிள்ளைகள் ...	... ...	0	1	0
நல்ல சிநேகிதர்கள்	... ...	0	1	0
மூன்று தங்க மாம்பழங்கள் ...	... ...	0	1	0
மூன்று குமாரர்கள்	... ...	0	1	0
வெள்ளைப் பூனை ...	... ...	0	1	0
தோட்டக்காரன்	... ...	0	1	0
நான்கு பாடகர்கள்	... ...	0	1	0
நைட்டிங்கேல் அம்மையார்	... ...	0	1	0
பால் வியாபாரி	... ...	0	1	0
மறுபடி முயற்சி செய் ...	... ...	0	1	0
கோவிந்தன் ...	... ...	0	1	0
சந்திரஹாஸன்	... ...	0	1	0
நளன் ...	... ...	0	1	0
கம்பன் ...	... ...	0	1	0
குசேலன்	... ...	0	1	0
புலவர் வறுமை	... ...	0	1	0
விநோதக் கூத்துக்கள்	... ...	0	1	0
கண்ணப்பன்	... ...	0	1	0
காதர் அலி	... ...	0	0	6

வி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,

புத்தக வியாபாரிகள்,

35, சின்னதம்பி தெரு,

சென்னை, 1.

வெற்றிவேற்கை

மூலமும் - உரையும்

கடவுள் வாழ்த்து

பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்
சரண அற்புதமலர் தலைக்கணி வோமே.

(பதப்பொருள்) பிரணவப்பொருளாம் - பிரணவம் என்னும் மந்திரப்பொருளாகிய, பெருந்தகை - பெருந்தன்மையையுடைய, ஐங்கரன் - ஐந்து கரங்களையுடைய விநாயகரது, சரணம் - திருவடிகளாகிய, அற்புதமலர் - அழகிய தாமரைமலர்களை, தலைக்கு அணிவோம் - யாம் தலையில் அலங்காரமாகத் தரிப்போம் என்றவாறு.

(கருத்து.) பிரணவப் பொருளாகிய விநாயகக்கடவுளுடைய திருவடித்தாமரைகளை வணங்குவோம்.

நூற்பயன்

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசே கரன்புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்
குற்றங் களைவோர் குறைவிலா தவரே.

(இ - ள்) கொற்கை - கொற்கை என்னும் நகரை, ஆளி - ஆளுபவனாகியும், குலம் - பாண்டிய குலத்திற்கு, சேகரன் - கிரீடம் போன்றவனாகியும் (விளங்குகின்ற), வெற்றி - ஜயத்தைத் தரும், வேல் - வேலாயுதத்தை ஏந்திய, கை - கையையுடைய, வீரராமன் - அதிவீரராமபாண்டியன், புகல் - சொன்ன, நல் - நல்ல, தமிழ் - தமிழாகிய கடலிலே, தெரிந்த - ஆராய்ந்தெடுத்த, நறுந்தொகை தன்னால் - (நல்ல மணிகள் போன்ற) நறுந்தொகை என்னும் இந் நூலால், குற்றம் - தங்கள் குற்றங்களை, களைவோர் - போக்கிக் கொள்வோர், குன்றவு - குறைவு, இலாதவர் - இல்லாதவராவர்.

(கரு.) கொற்கைக்கு அரசனாகிய அதிவீரராம பாண்டியன் சொன்ன நறுந்தொகையைப் படித்துத் தங்கள் குற்றங்களை நீக்கிக்கொள்பவர் குறைவற்றவராவர்.

நூல்.

1. எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்

(இ-ள்) எழுத்து - இலக்கண இலக்கிய நூல்களை, அறிவித்தவன் - கற்பித்தவன், இறைவன் - கடவுள், ஆகும் - ஆவான்.

(கரு.) நமக்குக் கல்வி கற்றுக் கொடுத்த ஆசிரியர் கடவுளுக்குச் சமமானவர் ஆவர்.

2. கல்விக் கழகு கசடற மொழிதல்

(இ-ள்) கல்விக்கு - வித்தைக்கு, அழகு - அழகாவது, கசடு - குற்றம், அற - நீங்க, மொழிதல் - பேசுதலாம்.

(கரு.) பிழையறப் பேசுதலே ஒருவன் கற்ற கல்விக்கு அழகாகும்.

3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்

(இ-ள்) செல்வர்க்கு - பணக்காரர்களுக்கு, அழகு - அழகாவது, செழுங்கிளை - நெருங்கிய சுற்றத்தவரை, தாங்குதல் - காப்பாற்றுதலாம்.

(கரு.) சுற்றத்தாரைக் காப்பதே செல்வர்களுக்கு அழகாகும்.

4. வேதியர்க் கழகு வேதமு மொழுக்கமும்

(இ-ள்) வேதியர்க்கு - பிராமணருக்கு, அழகு - அழகாவது, வேதமும் - வேதம் ஓதுதலும், ஒழுக்கமும் - நல்ல நடையுமாம்.

(கரு.) வேதம் ஓதுதலும் அதன்படி நல்ல நடையுடையோரா யிருத்தலும் பிராமணருக்கு அழகாகும்.

5. மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை

(இ-ள்) மன்னவர்க்கு - அரசருக்கு, அழகு - அழகாவது, செங்கோல் - செங்கோலினது, முறைமை - கிரமமாம்.

(கரு.) நீதி தவறாமல் செங்கோல் செலுத்துவதே அரசருக்கு அழகாகும்.

6. வணிகர்க் கழகு வளர்பொரு ளீட்டல்

(இ-ள்) வணிகர்க்கு - வர்த்தகருக்கு, அழகு - அழகாவது, வளர் - வளருகின்ற, பொருள் - திரவியத்தை, ஈட்டல் - சம்பாதித்தலாம்.

(கரு.) மென்மேலும் திரவியஞ் சம்பாதித்தலே வர்த்தகருக்கு அழகாகும்.

7. உழவோர்க் கழகே ருழுதூண் விரும்பல்

(இ-ள்) உழவர்க்கு - உழுது பயிர் செய்பவர்களுக்கு, அழகு - அழகாவது, ஏர் உழுது - ஏருழுது பயிர்செய்து உண்ணும், ஊண் - உணவை, விரும்பல் - விரும்புதலாம்.

(க-ரு) பயிரிட்டு ஜீவனஞ் செய்தல் பயிர் செய்வோருக்கு அழகாகும்.

8 மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்

(இ-ள்) மந்திரிக்கு - மந்திரிக்கு, அழகு - அழகாவது, வரும்பொருள் - இனி வரும் காரியத்தை, உரைத்தல் - முன்பு அரசனுக்கு அறிவித்தலாம்.

(க-ரு) பின்வருங் காரியத்தை அரசனுக்கு முன்னறிவித்தலே மந்திரிக்கு அழகாகும்.

9. தந்திரிக் கழகு தறுக ணாண்மை

(இ-ள்) தந்திரிக்கு - படைத்தலைவருக்கு, அழகு - அழகாவது, தறுகண் - அஞ்சாமையாகிய, ஆண்மை - வீரமாம்.

(க-ரு) போர்க்களத்தில் அஞ்சாத வீரத்தைப் படைத்திருத்தலே படைத்தலைவருக்கு அழகாகும்.

10. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்

(இ-ள்) உண்டிக்கு - உணவுக்கு, அழகு - அழகாவது, விருந்தோடு - விருந்தினரோடு இருந்து, உண்டல் - புசித்தலாம்.

(க-ரு) தனித்துண்ணாமல் விருந்தினருடன் உண்பதே உணவுக்கு அழகாம்.

11. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்

(இ-ள்) பெண்டிர்க்கு - பெண்களுக்கு, அழகு - அழகாவது, எதிர் - எதிராக, பேசாது - பேசாமல், இருத்தல் - இருத்தலாம்.

(க-ரு) கணவனோடு எதிர்த்துப் பேசாதிருத்தலே மனைவிக்கு அழகாகும்.

12. குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்

(இ-ள்) குலமகட்கு - நற்குலத்தில் பிறந்த பெண்ணுக்கு, அழகு - அழகாவது, தன் - தன்னுடைய, கொழுநனை - நாயகனை, பேணுதல் - காப்பாற்றுதலாம்.

(க-ரு) தன்னுடைய கணவனைக் காப்பாற்றுதலே நல்ல குலப்பெண்ணுக்கு அழகாகும்.

13. விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்

(இ - ள்.) விலைமகட்கு - வேசிக்கு, அழகு - அழகாவது, தன் மேனி - தன் சரீரத்தை, மினுக்குதல் - ஆடை ஆபரணங்களி னாலே அழகு படுத்திக்கொள்வதாம்.

(கரு.) தனது மேனியை ஆடை யாபரணங்களால் அலங் கரித்துக்கொள்வதே வேசிக்கு அழகாம்.

14. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்

(இ - ள்.) அறிஞர்க்கு - அறிவுடையோருக்கு, அழகு - அழ காவது, கற்று - வாசித்து, உணர்ந்து - தெளிந்து, அடங்கல் - அமைந்திருத்தலாம்.

(கரு.) நல்ல நூல்களை கற்றுத் தெளிந்து அமைந்து நடத் தலே அறிவுடையோர்க்கு அழகாகும்.

15. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை

(இ - ள்.) வறிஞர்க்கு - தரித்திரருக்கு, அழகு - அழகாவது, வறுமையில் - தரித்திரகாலத்திலும், செம்மை - ஒழுக்கம் கெடா திருத்தலாம்.

(கரு.) வறுமை வந்ததென்று ஒழுக்கத்தைக் கைவிடாமல் நடப்பதே தரித்திரருக்கு அழகாம்.

16. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே

(இ - ள்.) தேம்படு - இனிமைபொருந்திய, பனையின் - பனை மரத்தினது, திரள் - திரண்ட, பழத்து - பழத்திலுள்ள, ஒருவிதை - ஒரு பெரிய விதையானது, வான் - ஆகாயத்தை, உற - தாவ, ஓங்கி - உயர்ந்து, வளம் - செழுமை, பெற - உண்டாக, வளரினும் - வளர்ந் தாலும், ஒருவர்க்கு - ஒருவருக்கு, இருக்க - இருக்க, நிழலாகாது - நிழலைத்தாராது.

(கரு.) பனம்பழத்தின் விதை பெரிய மரமாக வளர்ந்த போதிலும் ஒருவர் தங்குதற்கும் நிழலைத்தாராது.

17. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே

(இ-ள்.) தெள்ளிய - தெளிந்த, ஆலின் - ஆலமரத்தின், சிறு - சிறிய, பழத்து - பழத்தின், ஒருவிதை - ஒரு விதையானது, தெள் - தெளிந்த, நீர் - நீரையுடைய, கயத்துள் - குளத்தி லுள்ள, சிறுமீன் - சிறிய மச்சத்தின், சினையினும் - முட்டையி னும், நுண்ணிதே - சிறியதே, ஆயினும் - ஆனாலும், அண்ணல் - பெருமை பொருந்திய, யானை - யானையும், அணி - அழகிய, தேர் - தேரும், புரவி - குதிரையும், ஆள் - காலாட்களு மாகிய, பெரும் - பெரிய, படையொடு - சேனையோடு, மன்னர்க்கு - அரசருக்கு, இருக்க - தங்கி இருக்க, நிழலாகும் - நிழலைத் தரும்.

(கரு.) ஆலம் விதை மீன் சினையினுஞ் சிறியதா யிருந்த போதிலும், மன்னர் சேனையுடன் தங்குதற்குரிய நிழலைத் தரு கின்றது.

18. ஆதலால், பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்

(இ-ள்.) பெரியோர் - உருவத்தில் பெரியவர், எல்லாம் - யாவரும், பெரியரும் - பெரியவரும், அல்லர் - ஆகார்; சிறி யோர் - உருவத்தில் சிறியவர், எல்லாம் - யாவரும், சிறியரும் - சிறியவரும், அல்லர் - ஆகார்.

(கரு.) உருவத்திற் பெரியவர் பெரியவரே யல்லர், காரியத் தில் சிறியரா யிருப்பினும் இருப்பர்; உருவிற் சிறியரெல்லாம் சிறியர் அல்லர், காரியத்தில் பெரியரா யிருப்பினும் இருப்பர்.

19. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்;
உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்;
கொண்டோ ரெல்லாம் பெண்டிரு மல்லர்.

(இ-ள்.) பெற்றோர் எல்லாம் - பெற்ற பிள்ளைகளெல்லாம், பிள்ளைகள் அல்லர் - மக்களாகார்; உற்றோர் எல்லாம் - உறவின ரெல்லாம், உறவினர் அல்லர் - பந்துக்களாகார்; கொண்டோர் எல்லாம் - விவாகஞ் செய்துகொண்டவரெல்லாம், பெண்டிரும் அல்லர் - மனைவியரும் ஆகார்.

(கரு.) பெற்ற பிள்ளைகளெல்லாம் நல்ல பிள்ளைகளாக இருப் பதும், பந்துக்கள் எல்லாம் நல்ல பந்துக்களாக இருப்பதும், கொண்ட மனைவியரெல்லாம் நல்ல மனைவியராக இருப்பதும் அருமை.

20\. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது;
சுடினுஞ் செம்பொன் தன்னொளி கெடாது;
அரைக்கினுஞ் சந்தனம் தன்மணம் அறாது;
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது;
கலக்கினுந் தண்கடல் சேறாகாது

(இ - ள்.) ஆவின்பால் - பசுவின்பாலை, அடினும் - காய்ச்சின லும், தன் சுவை - தன்னுடைய சுவையில், குன்றாது - குறைவுபடாது.

செம்பொன் - தங்கத்தை, சுடினும் - சுட்டாலும், தன் ஒளி - தன்னுடைய பிரகாசத்தில், கெடாது - குன்றாது;

சந்தனம் - சந்தனக்கட்டையை, அரைக்கினும் - தேய்த்தா லும், தன் மணம் - தன்னுடைய வாசனை, அறாது - நீங்காது;

கார் அகில் - கரிய அகிற்கட்டையை, புகைக்கினும் - புகை யச் செய்தாலும், பொல்லாங்கு - துர்நாற்றம், கமழாது - வீசாது;

தண்கடல் - குளிர்ச்சி பொருந்திய கடல், கலக்கினும் - கலக்கினாலும், சேறாகாது - சேறாகாது.

(கரு.) பாலைக் காய்ச்சினாலும் அது ருசியில் குறைபடாது, தங்கத்தை எவ்வளவு சுட்ட போதிலும் அது ஒளியிற் கெடாது, சந்தனக்கட்டையை எவ்வளவு அரைத்த போதிலும் அது தன் மணத்திற் குறையாது, அகிற் கட்டையைப் புகையச் செய்த போதிலும் அது துர்க்கந்தம் வீசாது, கடலைக் கலக்கின காலத் தும் அது சேறாகாது, அதுபோல, மேன்மக்களை யொருவர் பொல்லாங்கு செய்து கெடுப்பினும் தம் மேன்மையாகிய குணம் கெடாமலே கெடுப்பவர்க்கு நன்மையே செய்வார்.

21 அடினும் பால்பெய்து கைப்பறாது பேய்ச்சுரைக்காய்
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாது

(இ - ள்.) பேய்ச்சுரைக்காய் - பேய்ச்சுரைக்காயை, பால் பெய்து - பாலைவிட்டு, அடினும் - சமைத்தாலும், கைப்பறாது - கசப்பு நீங்காது; உள்ளி - உள்ளிப்பூண்டிற்கு, பல்விரை - பல வாசனைகளை, ஊட்டினும் - சேர்த்தபோதிலும், கமழாது - நல்ல வாசனை வீசாது.

(கரு.) பால்விட்டுச் சமைத்தாலும் பேய்ச்சுரைக்காய்க்குக் கசப்பு நீங்காது, வாசனைகளை யூட்டின போதிலும் உள்ளிப்பூண்டு தன் துர்க்கந்தத்தையே தரும்; அதுபோல கீழ்மக்கள் நல்லவ ரோடு எவ்வளவு இணங்கின போதிலும் அவர்கள் நம்மிட மிருந்து எவ்வளவு உதவியைப் பெற்ற போதிலும் தமது துர்க் குணத்தினின்றும் நீங்கார்.

22. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

(இ-ள்) ஒரு நாள் - ஒரு தினம், பழகினும் - பழகின போதிலும், பெரியோர் - பெரியோருடைய, கேண்மை - சிநேகமானது, இருநிலம் - பெரிய பூமி, பிளக்க - வெடிக்க, வேர் - வேரை, வீழ்க்கும் - ஊன்றும். ஏ - ஈற்றசை.

(கரு) ஒருநாள் பழகின போதிலும் பெரியோருடைய சிநேகமானது பெரிய பூமி பிளக்கும்படி தமது வேர்போல ஊன்றி நிற்கும்.

23. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே

(இ-ள்) நூறு ஆண்டு - நூறு வருஷம், பழகினும் - பழகினாலும், மூர்க்கர் - கோபிகளுடைய, கேண்மை - சிநேகம், நீர்க்குள் - தண்ணீரிலுள்ள, பாசிபோல் - பாசிபோல, வேர் - வேரை, கொள்ளாது - ஊன்றாது. ஏ - ஈற்றசை.

(கரு) நூறு வருஷம் பழகின போதிலும் மூர்க்கருடைய சிநேகமானது நீர்ப்பாசிபோல வேரூன்றாது.

24. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே

(இ-ள்) பெருமையும் - உயர்வும், சிறுமையும் - தாழ்வும், தான்தர - தான் தன் செய்கையால் கொடுக்க, வரும் - அவனிடத்து வரும். ஏ - ஈற்றசை.

(கரு) உயர்வுந் தாழ்வும் அவரவர்க்குத் தந்தம் செய்கையால் உண்டாகும்.

25. *சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே

(இ-ள்) சிறியோர் - சிறியவர்கள், செய்த - செய்த, சிறுபிழை - சிறிய குற்றம், எல்லாம் - யாவும், பெரியோராயின் - உயர்ந்தோரானால், பொறுப்பது - சகிப்பது, கடனே - கடமையாம்.

(கரு) *பெரியோரா யிருப்பவர்கள் சிறியவர் செய்த சிறு குற்றங்களை மன்னிப்பது அவர்கள் கடமை.

26. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே

(இ-ள்.) சிறியோர் - சிறியவர், பெரும்பிழை - பெரிய குற்றங்களை, செய்தனராயின் - செய்தாரேயானால், பெரியோர் - பெரியவர், அப்பிழை - அந்த குற்றத்தை, பொறுத்தலும் - சகித்தலும், அரிது - அருமையே.

(க-ரு.) சிறியோர் பெருங் குற்றஞ் செய்தால் பெரியோர் அதை மன்னியார்கள்.

27. கற்கை நன்றே கற்கை நன்றே

(இ-ள்.) கற்கை - கற்குதல், நன்றே - நல்லதே, கற்கை - கற்குதல், நன்றே - நல்லதே.

(க-ரு.) நூல்களைக் கற்றல் மிகவும் நல்லது.

28. பிச்சை புகினுங் கற்கை நன்றே

(இ-ள்.) பிச்சை - பிச்சையெடுக்க, புகினும் - போகினும், கற்கை - நூல்களைக் கற்றல், நன்றே - நல்லதே.

(க-ரு.) பிச்சையெடுத்தாவது கல்வி கற்க வேண்டும்.

29. கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.

(இ-ள்.) கல்லா - படியாத, ஒருவன் - ஒருவன், குலநலம் - தன் சாதியின் சிறப்பை, பேசுதல் - சொல்லுதல், நெல்லினுள் - நெல்லினிடத்து, பிறந்த - உண்டான, பதராகும் - பதருக்கு ஒப்பாகும். ஏ - அசை.

(க-ரு.) படியாத வொருவன் தன் பிறப்பின் வளப்பத்தை யெடுத்துப் பேசப்படாது.

30. நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே

(இ-ள்) நாற்பால் - (அந்தணன், அரசன், வணிகன், வேளாளன் என்னும்) நான்கு வகைப்பட்ட, குலத்தின் - வருணத்தின், மேற்பால் - முன்னின்ற (அந்தணர்) வருணத்திற் பிறந்த, ஒருவன் - ஒருத்தன், கற்றிலனாயின் - கல்லாதவனானால், கீழ் இருப்பவனே - (அவன்) தாழ்ந்த இடத்தில் இருக்கத் தக்கவனே.

(க-ரு.) உயர்குலத்திற் பிறந்தபோதிலும் கல்லாதவன் கீழாக வைத்து எண்ணப்படுவான்.

31. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருக வென்பார்

(இ-ள்) எ - எந்த, குடி - வம்சத்தில், பிறப்பினும் - பிறந்தாலும், யாவரேயாயினும் - எவர்களாயினும், அ - அந்த, குடியில் - குலத்தில், கற்றோரை - படித்தவரை, வருக - வாரும், என்பார் - என்று சொல்லி மதிப்பார்கள்.

(க-ரு.) எந்த வம்சத்தில் பிறந்தவராகிலும் படித்தவரை யாவரும் உபசரித்து அழைப்பார்கள்.

32. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்

(இ-ள்) அறிவுடை - கல்வி யறிவுடைய, ஒருவனை - ஒருத்தனை, அரசனும் - இராசனும், விரும்பும் - விரும்புவான்.

(க-ரு.) அறிவுள்ளவன் அரசனாலும் விரும்பப்படுவான்.

33. அச்ச முள்ளடக்கி யறிவகத் தில்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
யெச்சமற் றேமாந் திருக்கை நன்றே

(இ-ள்.) அச்சம் - பயம் ஒன்றினை, உள்ளடக்கி - உள்ளே யடக்கி, அறிவு - விவேகம், அகத்து - மனத்தில், இல்லா - இல்லாத, கொச்சை மக்களை - இழிவான பிள்ளைகளை, பெறுதலின் - பெறுதலைப் பார்க்கிலும், அக்குடி - அந்தக் குலம், எச்சம் அற்று - சந்ததி இல்லாமல், ஏமாந்து - இன்புற்று, இருக்கை - இருத்தல், நன்று - நல்லது. ஏ - ஈற்றசை.

(க-ரு.) அறிவில்லாத பிள்ளைகளைப் பெற்று வருந்துவதை விட அவ் வமிசம் சந்ததி யற்றிருத்தலே நன்மையாம்.

34. யானைக் கில்லை தானமுந் தருமமும்

(இ-ள்) தானமும் - கொடுத்தலும், தருமமும் - தருமமும், யானைக்கு இல்லை - யானைக்கு இல்லையாம்.

(க-ரு.) யானைக்குக் கை நீளமாயிருந்தும் அதற்குத் தானமும் தருமமும் கிடையா.

35. பூனைக் கில்லை தவமுந் தயையும்

(இ-ள்.) பூனைக்கு - பூனைக்கு, தவமும் - விரதமும், தயையும் - சாந்தமும், இல்லை - இல்லையாம்.

(க-ரு.) பூனை கண்மூடிக்கொண்டு தவசிபோல இருந்தாலும் தவமுஞ் சாந்தமும் இல்லை.

36. ஞானிக் கில்லை யின்பமுந் துன்பமும்

(இ - ள்.) ஞானிக்கு - ஞானவானுக்கு, இன்பமும் - சுகமும், துன்பமும் - துக்கமும், இல்லை - இல்லையாம்.

(கரு.) ஞானி உலகத்தாருடைய கலந்த இன்ப துன்பங்களை அநுபவிப்பவன்போலக் காட்டினாலும் அவன் அவை யிரண்டினும் நிருப்தியாயிருப்பான்.

37. சிதலைக் கில்லை செல்வமுஞ் செருக்கும்

(இ - ள்.) சிதலைக்கு-செல்லுக்கு, செல்வமும் - ஐசுவரியமும், செருக்கும் - களிப்பும், இல்லை - இல்லையாம்.

(கரு.) பிறருக்கு உதவிசெய்யும் செல்வருடைய பொருள் என்றும் தாழ்வுண்டு களிப்பவருடைய பொருளென்றும் எண்ணுந் தன்மை செல்லுக்கு இல்லை.

38. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை

(இ - ள்.) அச்சமும் - பயமும், நாணமும் - வெட்கமும், அறிவு - விவேகம், இலோர்க்கு - இல்லாதவருக்கு, இல்லை - இல்லை.

(கரு.) அறிவில்லாதவர்க்குப் பயமும் வெட்கமும் இல்லை.

39. கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை

(இ - ள்.) கேளும் - நட்பினரும், கிளையும் - சுற்றமும், கெட்டோர்க்கு - கெட்டுப்போனவருக்கு, இல்லை - இல்லை.

(கரு.) கெட்டுப்போனவர்க்குச் சுற்றமும் சினேகமும் இல்லை.

40. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா

(இ - ள்.) உடைமையும் - செல்வமும், வறுமையும் - தரித்திரமும், ஒருவழி - ஒரு வழியில், நில்லா - நிற்கமாட்டா.

(கரு.) செல்வமும் தரித்திரமும் நிலையற்றவை.

41. குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்

(இ - ள்.) குடை - குடையின், நிழல் - நிழலில், இருந்து - இருந்து, குஞ்சரம் - யானையை, ஊர்ந்தோர் - நடத்தினவர், நடை மெலிந்து - நடை தளர்ந்து, ஓரூர் - ஒரு தேசத்தை, நண்ணினும் - சேர்ந்தாலும், நண்ணுவர் - சேருவர்.

(கரு.) சந்திரவட்டக் குடையுடன் யானைமீது செல்லுமரசரும் ஒருகாலத்தில் கால்நடையாக மற்றொரு தேசத்திற்குச் செல்ல நேர்ந்தாலும் நேரும்.

42. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடைப்பினு மடைவர்

(இ - ள்.) சிறப்பும் - கீர்த்தியும், செல்வமும் - ஐசுவரியமும், பெருமையும் - மேன்மையும், உடையோர் - உடையவர், அறக்கூழ்ச் சாலை - தரும அன்னசாலையை, அடைப்பினும் - சேர்ந்தாலும், அடைவர் - சேர்வர்.

(க.) பாக்கியமும், கீர்த்தியும், மேன்மையும் உடைய அரசர்கள் அவைகளிழந்து வறுமையுற்றுப் பசிநோய் தருமசத்திரத்தினை அடைந்தாலும் அடைவார்கள்.

43. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்து அரசாளினு மாளுவர்

(இ - ள்.) அறத்திடு - தருமமாகக்கொடுக்கின்ற, இடு - இடப்படும், பிச்சை - பிச்சையை, கூவி - கூப்பிட்டு, இரப்போர் - யாசிப்போர், அரசோடு - அரசிருக்கையாகிய, இருந்து - வீற்றிருந்து, அரசாளினும் - அரசு ஆண்டாலும், ஆளுவர் - ஆள்வார்.

(க.) இரந்துண்டு பிச்சை யெடுப்போர் அரசராகவாழ்ந்து உலகை யாண்டாலும் ஆளக்கூடும்.

44. குன்றத் தனைய இருநிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினு மழிவர்

(இ - ள்.) குன்றத்து அனைய - மலையையொத்த, இரு - பெரிய, நிதியை - செல்வத்தை, படைத்தோர் - படைத்தவரும், அன்றைப் பகலே - (படைத்த) அவ்வொருபகலிலே, அழியினும் - (அப்பொருளை அழவிலைமையால்) இழந்து அழியினும், அழிவர் - இழப்பர்.

(க.) மலைபோலச் செல்வமுற்றோரும் அதனை அவ்வேளையிலே இழப்பதுண்டு.

45. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாயினு மாகும்

(இ - ள்.) எழு - ஏழு, நிலை - அடுக்குகளையுடைய, மாடம் - வீடுகளும், கால்சாய்ந்து - அடிப்பக்கஞ் சாய்ந்து, உக்கு - கெட்டுப்போய், கழுதை - கழுதைகள், மேய் - மேய்கிற, பாழ் - பாழ்நிலம், ஆயினும் - ஆனாலும், ஆகும் - ஆகும்.

(க.) மாடமாளிகைகளெல்லாம் அழிந்து கழுதை மேயும் பாழிடமாகவுங் கூடும்.

46. மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த வாடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்

(இ - ள்.) மணஅணி - மணக்கோலத்தை, அணிந்த - பூண்ட, மகளிர் - பெண்கள், ஆங்கே - அப்பொழுதே, பிணஅணி - பிணக்கோலம், அணிந்து - பூண்டு, தம் - தமது, கொழுநரை - கணவரை, தழீஇ - தழுவி, உடுத்த - (முன்பு) உடுத்த, ஆடை - கூறையே, கோடிஆக - அறப்புக் கூறையாக, முடித்த கூந்தல் - பின்னிய கூந்தலை, விரிப்பினும் - விரித்தாலும், விரிப்பர் - விரிப்போர்கள்.

(கரு.) மணக்கோலம்பூண்ட மாதர் அம் மணப்பந்தரிலேயே தங்கணவரைப் பிணக்கோலத்துடன் கண்டு தமது கூந்தலை விரித்து அழும்படி சம்பவிப்பதும் உண்டு.

47. பெற்றமுங் கழுதையு மேய்ந்த வப்பாழ்
பொற்றொடி மகளிரு மைந்தருஞ் செறிந்து
நெற்பொலி நெடுநக ராயினு மாகும்.

(இ - ள்.) பெற்றமும் - எருதும், கழுதையும் - கழுதையும், மேய்ந்த - மேய்ந்த, அப்பாழ் - அந்தப் பாழ்நிலமானது, பொன்தொடி - பொன்னாலாகிய வளையலை (அணிந்த), மகளிரும் - பெண்களையும், மைந்தரும் - புருஷரையும், கூடி பொருந்தி, நெல்பொலி - நெல்லினது அம்பாரத்தை யுடைய, நெடுநகர் - பெரிய நகரமாக, ஆயினும் - ஆனாலும், ஆகும் - ஆகும்.

(கரு.) பாழ்நிலம் ஒருகாலத்தில் நல்ல நகரமாக மாறுதலும் உண்டு.

48. இல்லோ ரிரப்பது மியல்பே யியல்பே

(இ - ள்.) இல்லோர் - பொருள் இல்லாதவர், இரப்பதும் - யாசிப்பதும், இயல்பே இயல்பே - இயற்கையே இயற்கையே.

(கரு.) பொருளில்லாதவர் யாசகம் செய்வது இயற்கை.

49. இரந்தோர்க் கீவது முடையோர் கடனே

(இ - ள்.) இரந்தோர்க்கு - யாசகஞ்செய்தோர்க்கு, ஈவதும் - கொடுத்தலும், உடையோர் - பொருள் உடையோர், கடனே - கடமையாம்.

(கரு.) பொருளுடையோர் யாசகர்க்குக் கொடுக்கவேண்டியது அவசியமாம்.

50. நல்ல ஞானமும் வானமும் பெறினும்
எல்லா மில்லை யில்லில் லோர்க்கே

(இ - ள்.) நல்ல ஞானமும் - நல்ல பூவுலகையும், வானமும் - தேவருலகையும், பெறினும் - பெற்றாலும், எல்லாம் - (அவைகளுள்) ஒன்றும், இல் - மனைவியாரை, இல்லோர்க்கு - இல்லாதவர்க்கு, இல்லை - இல்லையாம், ஏ - அசை.

(க-ரு.) மனைவி இல்லாதவர்க்கு எவ்விதச் செல்வமும் பயன்படாது.

51. தறுகண் யானை தான் பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே

(இ - ள்.) தறுகண் - அஞ்சாமையையுடைய, யானை தான் - யானையானது, பெரிது ஆயினும் - (எல்லாமிருகங்களைவிட உருவத்தால்) பெரியதாயினும், சிறுகண் - சிறிய கணுக்களுள்ள, மூங்கில் கோற்கு - மூங்கிற் கோலுக்கு, அஞ்சும் - பயப்படும்.

(க-ரு.) உருவிற் பெரியவரும் தம்மை யாள்வோர் சிறியராயிருந்தபோதிலும் அவர்க்குக் கீழ்ப்பட்டு நடப்பார்.

52. குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்
புன்றலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே

(இ - ள்.) குன்று உடை - மலைகளை உடைய, நெடுங்காடு ஊடே - பெரிய காட்டினிடத்தே, வாழினும் - வாழ்ந்தாலும், புன்தலை - சிறிய தலையையுடைய, புல்வாய் - மானானது, புலிக்கு அஞ்சும் - புலிக்குப் பயப்படும். ஏ - அசை.

(க-ரு.) ஒரே காட்டில் மானும் புலியும் வாழ்ந்தபோதிலும் மான் புலிக்கு அஞ்சியே உயிர்வாழும்.

53. ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்
தேரை பாம்பிற்கு மிகவஞ் சும்மே

(இ - ள்.) ஆரை - ஆரைப்பூண்டு (நிறைந்த), பள்ளத்து ஊடே - பள்ளத்தினிடத்தே, வாழினும் - வாழ்ந்தாலும், தேரை - தேரையானது, பாம்பிற்கு - பாம்புக்கு, மிக அஞ்சும் - மிகவும் பயப்படும். ஏ - அசை.

(க-ரு.) (வீரம் இல்லாமையினால்) தேரை பள்ளத்தில் வசித்திருக்கும் பாம்பிற்கு அஞ்சும்.

54. கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டில்
கடும்புலி வாழுங் காடு நன்றே.

(இ-ள்.) கொடுங்கோல்-அநீதியையுடைய, மன்னர் - அரசர்கள், வாழும்-வாழ்கின்ற, நாட்டின்-நாட்டைப் பார்க்கிலும், கடும்புலி-கொடியபுலி, வாழுங்காடு-வாழ்கின்றகாடு, நன்று ஏ-நல்லதே.

(க-ரு.) கொடுங்கோன்மன்னர்கீழ் வாழ்தல் கொடியது.

55. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்றேர் குறவர் தேய நன்றே.

(இ-ள்.) சான்றோர் - (அறிவால்) நிறைந்த பெரியோர், இலா - இல்லாத, தொல்பதி - பழமையான ஊரிலே, இருத்தலின் - வாழ்தலினும், தேன்தேர் - தேனைத் தேடுகிற, குறவர் தேயம் - குறவருடைய மலைநாடு, நன்று ஏ - நல்லதே.

(க-ரு.) நல்லோரில்லாத நாட்டில் இருப்பவருக்கு நன்மை இல்லை.

56. காலையு மாலையு நான்மறை யோதா
அந்தண ரென்போ ரனைவரும் பதரே.

(இ-ள்.) காலையும்-காலைப்பொழுதிலும், மாலையும் - மாலைப்பொழுதிலும், நான்மறை - நான்கு வேதங்களையும், ஓதா - ஓதாத, அந்தணர் என்போர் - பிராமணர் என்று சொல்லப்படுவோர், அனைவரும் - எல்லாரும், பதர் - பதராவர், ஏ - அசை.

(க-ரு.) பிராமணர்கள் இருவேளையிலும் வேதம் ஓதவேண்டும்.

57. குடியலைத் திரந்து கோலொடு நின்ற
முடியுடை இறைவனு மூர்க்கனும் பதரே.

(இ-ள்.) குடி அலைத்து - குடிகளை வருத்தி, இரந்து - பொருள்வாங்கி, கோலொடு நின்ற - கொடுங்கோலொடு நிலைபெற்று நின்ற, முடியுடை - கிரீடத்தையுடைய, இறைவனும் - அரசனும், மூர்க்கனும் - மூர்க்கனும், பதர் - (அரசருள்) பதராவன்.

(க-ரு.) குடிகளை வருத்தி அரசன் வரி வாங்கப்படாது.

58. முதலுள பண்டங் கொண்டு வாணிபஞ்செய்
ததன்பய னுண்ணா வணிகரும் பதரே.

(இ-ள்.) முதல் உள - முதலாகவுள்ள, பண்டம் - பொருளை, கொண்டு - வைத்துக்கொண்டு, வாணிபம் செய்து - வர்த்தகஞ் செய்து, அதன் பயன் - அதனால் வரும் இலாபத்தை, உண்ணா - அநுபவியாத, வணிகரும்-வைசியரும், பதர்-பதராவர். ஏ-அசை.

(க-ரு.) வர்த்தகத்தில் முதலை வைத்துக்கொண்டு லாபத்தை மாத்திரம் எடுத்துச் செலவு செய்ய வேண்டும்.

59. வித்து மேரு முளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கு மேழையும் பதரே.

(இ - ள்.) வித்தும் - விதையும், ஏரும் - உழுமாடும், உள ஆய் இருப்ப - நீங்காதிருக்க, அங்கு - அவற்றால் (முயலாமல்), எய்த்து - சோர்ந்து, இருக்கும் ஏழையும் - இருக்கின்ற அறிவிலானும், பதர் - பதராவன்.

(கரு.) வேளாளன் சோம்பல் இன்றி உழுது பயிர்செய்து ஜீவிக்கவேண்டும்.

60. தன்மனை யாளைத் தாய்மனைக் ககற்றிப்
பின்பவட் பாராப் பேதையும் பதரே.

(இ - ள்.) தன்மனையாளை - தன் மனைவியை, தாய்மனைக்கு - தாய் வீட்டிற்கு, அகற்றி - போக்கி, பின்பு - பின்னே, அவள் பாரா - அவளைப் பாராமலிருக்கிற, பேதையும் - மூடனும், பதர் - பதராவன்.

(கரு.) மனைவியை, அவள் தாய் வீட்டிற்கு அனுப்பினால் தான் அடிக்கடிபோய் அவளை விசாரித்து வரவேண்டும்.

61. தன்மனை யாளைத் தனிமனை யிருத்திப்
பிறன்மனைக் கேகும் பேதையும் பதரே

(இ - ள்.) தன்மனையாளை - தன் மனைவியை, தனி - தனியாக, மனை - (தனது) வீட்டில், இருத்தி - இருக்க வைத்து, பிறன் மனைக்கு - அயலான் மனைவியிடத்து, ஏகும் - போகின்ற, பேதையும் - அறிவில்லாதவனும், பதர் - பதராவன்.

(கரு.) பிறர் மனைவியரை விரும்புதல்கூடாது.

62. தன்னா யுதமும் தன்கைப் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

(இ - ள்.) தன் ஆயுதமும் - தன்னுடைய ஆயுதத்தையும், தன்கையில் - தன்கையில் இருந்த, பொருளும் - திரவியத்தையும், பிறன் கையில் - பிறனுடைய கையில், கொடுக்கும் - கொடுக்கின்ற, பேதையும் - அறிவிலாதவனும், பதர் - பதர் ஆவன், ஏ - அசை.

(கரு.) தன் ஆயுதத்தையும் தன் கைப்பொருளையும் பிறர் கையில் கொடுக்கப்படாது.

63. வாய்ப்பறை யாகவு நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்

(இ - ள்.) வாய் - வாயே, பறை ஆகவும் - பறையாகவும், நா - நாவே, கடிப்பு ஆகவும் - அடிக்குங்கோலாகவும் (கொண்டு), சாற்றுவது - தெரிவிப்பதாகிய, ஒன்றை - ஒருகாரியத்தை, போற்றி - ஆதரவோடு, கேண்மின் - கேளுங்கள்.

(கரு.) பிரசித்தமாகச் சொல்லுவதைக் கவனிக்க வேண்டும்.

அது யாதென்னில்:—

64. பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

(இ - ள்.) பொய் உடை - பொய்யை உடைய, ஒருவன் - ஒரு மனிதன், சொல்வன்மையினால் - (பேசும்) சொல்லின் வலிமையால், மெய்போலும் - (அசை சொல்) மெய்போலத் தோன்றும், மெய்போலும் - மெய்போலத் தோன்றும்.

(கரு.) பொய்யன் தன் சாமர்த்தியத்தால் பொய்யையும் மெய் போலப் பேசுவான்.

65. மெய்யுடை யொருவன் சொல்மாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே

(இ - ள்.) மெய் - சத்தியத்தை, உடை - உடைய, ஒருவன் - ஒருமனிதன், சொல் மாட்டாமையால் - பேசும் வல்லமையில்லாமையால், பொய் போலும் - (அசைசொல்) பொய் போலத் தோன்றும், பொய் போலும் - பொய் போலத் தோன்றும்.

(கரு.) மெய்யன் தன் சாமர்த்தியக் குறைவால் மெய்யையும் பிறர் நம்பாதபடி பொய் யாக்கிக்கொள்வான்.

அதனால் - அத்தன்மையால்

66. இருவர்தஞ் சொல்லையு மெழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே.

(இ - ள்.) இருவர்தம் - இருதிறத்தாருடைய, சொல்லையும் - வார்த்தையையும், எழுதரம் கேட்டு - எழு முறை கேட்டு, இருவரும் - (அந்த) இருதிறத்தாரும், பொருந்த - ஒத்துக்கொள்ள, மனுமுறை - மநுநூலின், நெறியின் - வழியால், உரையார் ஆயின் - (முடிவு) சொல்லாராயின், வழக்கு இழந்தவர்தாம் - வழக்கினை யிழந்தோர், மனம் - மனம், உறமறுகி நின்று - மிகவும் கலங்கி நின்று, அழுத - அழுதலால் (ஆகிய), கண்ணீர் - கண்ணீரானது, முறை உற - வரிசையாக, தேவர் மூவர் - மூன்று தேவர்களும், காக்கினும் - காத்தாலும், வழிவழி - (அவர்) சந்ததிகளை, ஈர்வது - அறுப்பதாகிய, ஓர் - ஒரு, வாளாகும் - வாளாகும். ஏ - அசை.

(கரு.) நியாயாதிபதி இருதிறத்தாரையும் எழு முறை கேட்டு இருவரும் அங்கீகரிக்கும்படி தீர்ப்புச் சொல்லவேண்டும்.

67. பழியாவருவது மொழியா தொழிவது.

(இ - ள்.) பழி ஆ - பின் நிந்தையாக, வருவது - வருங்காரியத்தை, மொழியாது - பேசாமல், ஒழிவது - விடக்கடவன்.

(கரு.) நிந்தையைத் தரும் விஷயங்களைப் பேசப்படாது.

68. சுழிபா வருபுன லிழியா தொழிவது.

(இ - ள்.) சுழிபா - சுழித்து, வருபுனல் - வருகின்ற வெள்ளத்தில், இழியாது - இறங்காது, ஒழிவது - விடக்கடவன்.

(கரு.) வெள்ளத்தில் இறங்கப்படாது.

69. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

(இ - ள்.) துணையோடு அல்லது - துணையினோடு அல்லாமல், நெடுவழி - தூர வழியில், போகேல் - செல்லாதே.

(கரு.) நெடும் பயணம் செல்வதானால் துணையுடன் செல்ல வேண்டும்.

70. புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.

(இ - ள்.) புணை மீது - தெப்பத்தின்மேல், அல்லது - அல்லாமல், நெடும்புனல் - பெரிய நீரிலே, ஏகேல் - (நீந்தி) செல்லாதே.

(கரு.) ஆறு முதலிய பெரிய நீரிலே தெப்ப மின்றிச் செல்லப்படாது.

71. எழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலாதன கொடு முயல்வா காதே.

(இ - ள்.) எழில் ஆர் முலை - அழகு நிறைந்த மார்பினையும், வரி விழியார் - வரிகள் பொருந்திய கண்களையுமுடைய மாதர்கள், தந்திரம் - (சொல்லும்) உபாயங்களுள், இயலாதன - பொருந்தாதனவற்றை, கொடு - (கை) கொண்டு, முயல்வு - முயலுதல், ஆகாது - கூடாது.

(கரு.) மாதர்கள் சொல்லும் அனைத்தையும் கைக்கொள்ளப்படாது.

72. வழியே ஏகுக வழியே மீளுக.

(இ - ள்.) வழியே - (இல்லற) வழியிலே, ஏகுக - செல்லக்கடவன், வழியே - (அந்த) வழியிலே (நின்று), மீளுக - (துறவற வழியில்) திரும்பக்கடவன்.

(கரு.) இல்லறத்தைச் செவ்வையாக நடத்திப் பின் துறவறம் அடையவேண்டும்.

73. இவைகா ணுலகிற் கியலா மாறே.

(இ - ள்.) இவைகாண் - இவைதாம், உலகிற்கு - உலகில் உள்ளோர்க்கு, இயல் ஆம் - (நடக்க) கூடிய, ஆறு - நெறிகளாம்.

(கரு.) மேற்சொன்னவைகள் உலகத்தாருக்கு உரியவை.

74. வாழிய நலனே வாழிய நலனே

(இ - ள்.) நலன் - (எல்லா) நன்மைகளும், வாழிய - வாழ்க, நலன் - (எல்லா) இன்பங்களும், வாழிய - வாழ்க.

(கரு.) எல்லாநன்மைகளும் இன்பங்களும் வாழ்க என்பதாம்.

நறுந்தொகை உரை

முற்றிற்று.

PRINTED AT THE 'CAXTON PRESS' MADRAS — 1914.

118030

O-113AP

M14